**வலப்பனே பிரதேச சபை - 2023**

------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வலப்பனே பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலப்பனே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந் நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (I) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் பொழிப்பறிக்கையின் 1.2.2 ஆம் பந்தியின் (ஆ),(இ),(ஈ),(உ),(ஊ),(ஐ),(ஒ),(க) மற்றும் (கா) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 58,150 ஆன சேதனப் பசளை இருப்பும் 07 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 147,361 ஆன நானாவித செலவினம் மற்றும் ரூபா 94,300 ஆன வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2024 இன் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊழியர் கடன் மீதி ரூபா 122,415 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளில் 02 கணக்குகளுக்குரிய அட்டவணையில் காண்பிக்கப்பட்ட மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 1,936,538 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது. | 2024 இன் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதாக | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ரூபா 2,347,317 ஆன 05 கணக்கு மீதிகளுக்குரிய பதிவேடுகள், அட்டவணைகள் மற்றும் கோவைகள் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது. | சரியான பிணை பதிவேட்டை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதுடன் ஏனைய ஏனைய தகவல்களை சமர்ப்பிப்பதாக | மீதிகளை உறுதிப்படுத்துதற்கு உரிய பதிவேடுகள் மற்றும் கோவைகள் பேணப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ) பாராளுமன்ற சட்டங்கள்** | | | |
| 1946 ஆகஸ்ட் 07 ஆம் திகதிய 30 ஆம் இலக்க வீதவரி மற்றும் மதிப்பீட்டு சட்டத்தின் 20 பிரிவு | வீதவரிக்காக ஆதனங்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆதனங்கள் மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் பிரதேச சபை 2011 ஆம் ஆண்டின் மதிப்பீட்டை அடிப்படையாக மீளாய்வாண்டின் போதும் வீத வரியினை அறவீடு செய்திருந்தது. | ஆதன மதிப்பீட்டை புதுப்பிப்பதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கடிதங்கள் மற்றும் உரிய தகவல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| **(ஆ) பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | |
| 2009 ஏப்ரல் 16 ஆந் திகதி 09/2009 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | ராகல உப அலுவலகத்தின் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளியேறல் பதிவு செய்வதற்காக கைவிரலடையால இயந்திரம் பயன்படுத்தியிருக்கவில்லை. இயந்திரம் மீளாய்வாண்டின் செப்தம்பர் மாதம் முதல் பயன்படுத்தல் ஆரம்பிக்கப் பட்டு 1½ மாதங்களுக்குள் மீளாய்வாண்டின் ஒக்தோபர் 18 ஆந் திகதி இயந்திரத்தை சேதமாக்கி அது செயற்பாடற்றிருந்தது. | பெறுமதியை அறவீடு செய்யும் அடிப்படையில் தற்போது கைவிரலடையால இயந்திரமொன்று பொருத்தியுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,403,905 ஆக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,153,885 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,027,000 | 5,401,063 | 5,658,278 | 3,008,958 | 2,877,000 | 4,768,063 | 5,327,808 | 3,266,172 |
| (ii) | வாடகை | 10,885,500 | 4,320,795 | 3,757,022 | 8,673,602 | 11,518,000 | 16,184,257 | 2,855,586 | 8,109,829 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,974,000 | 3,898,359 | 3,898,359 | | 4,456,000 | 2,959,854 | 2,959,854 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 8,500,000 | 3,055,990 | 9,370,627 | 3,135,499 | 91,103,000 | 14,309,041 | 19,149,245 | 9,450,127 |
| | | 26,386,500 | 16,676,207 | 22,684,286 | 14,818,059 | 109,954,000 | 38,221,215 | 30,292,493 | 20,826,128 |

#### 2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு- | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடை அறைகளிலிருந்து பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 1,556,904 அதாவது 62 சதவீதமும் வீத வரி ரூபா 1,442,615 அதாவது 57 சதவீதமும் நிலுவையாக இருந்தன. | கடை அறைகளின் உரித்து சீராக இல்லாமையால் வாடகை அறவீடு தாமதமாக உள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | **வாடகை** | | |
| | சபைக்குரிய 45 கடைகளிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மொத்தம் ரூபா 7,084,698 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | காணியின் உரித்து தொடர்பாக சிக்கல் காணப்படுவதால் கடை அறைகளின் நிலுவைகளை அறவிட முடியாதுள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும் |

**(இ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| i. | 1947 இன் 43 ஆம் இலக்க களியாட்ட வரிக் கட்டளை சட்டத்தின் பிரகாரம் ராகல உப அலுவலக அதிகார பிரதேசத்தில் பேணி செல்லப்படுகின்ற சினிமா கொட்டைகைகளில் இருந்து களியாட்ட வரி அறவிடப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் நடவடிக்கைகளுக்காக பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் வருமான பரிசோதகர் ஆகியோர் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| ii. | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 03 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய வாரச்சந்தை குத்தகை, வாடகை, வாகனம் நிறுத்தி வைத்தல் கட்டணம் மற்றும் மலசல கூட வாடகை என மொத்தம் ரூபா 926,917 அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நடவடிக்கை எடுப்பதாக | வருமானத்தை அறவிடுவதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும |
| iii | சபை அதிகாரப் பிரதேசத்தில் சுற்றுலா சபையின் அங்கீகரிக்கப்பட்ட சுற்றுலா ஹொட்டல்கள், தங்குமிடங்கள் 06 சிற்றுண்டிச்சாலைகளில் இருந்தான வருமானத்தின் நூற்றுக்கு ஒரு சதவீத வருடாந்த அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் அறவிடப்பட்டு இருக்கவில்லை | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும் |

**(ஈ) நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 1,092,299 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 2,043,200 ஆக இருந்தது. | முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்படுவதாக | வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் சபையின் வருமானத்தை அதிகரித்து கொள்வதற்காக உப உறுப்புரைகள் பிறப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் சபையினால் புதிய வருமான வழிகள் இனங்காணப்பட்டு உப உறுப்புரைகள் பிறப்பிக்கப்பட்டு இருக்கவில்லை | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | உப உறுப்புரைகள் பிறப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை சட்டத்தின் 79 முதல் 84 ஆம் பிரிவுகளின் பிரகாரம் இநீர் வடிகாலமைப்பு தொடர்பில் எவ்வித அபிவிருத்தி நடவடிக்கை நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. | செலவின கட்டுப்பாட்டின் பேரில் அபிவிருத்தி செயற்பாடு கள் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இவ்வாண்டினெ் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளில் செயற்பாடுகளை மேற்கொள் வதற்காக பிரதேசத்தின் மலப் போக்குவரத்து நடவடிக்கைக்காக கலி வண்டி சேவையொன்று நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைக்கு கலி வண்டி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக வேண்டுகோள் கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் பொது மக்கள் சேவைகள் நிறைவேற்ற வேண்டும் |
| (ஈ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் III ஆம் பகுதியின் பிரகாரம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ஒழுங்கைகள் நிர்மாண மேம்படுத்த லுக்காக சபை நிதியத்தில் இருந்து எவ்வித தொகையும் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை | அரசு செலவின கட்டுப்பாட்டின் பேரில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டுள்ளதுடன் இவ்வாண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்வதாக | சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் பொது மக்கள் சேவைகள் நிறைவேற்ற வேண்டும் |
| (உ) | சபையினால் பணி செல்லப்படுகின்ற 02 நீர் முன்மொழிவுகளில் இருந்து நீர் சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நீர் திட்டங்களைப் பராமரிப்பதில் சிக்கல்கள் உள்ளதால் சமூக நீர் அலகுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுப்பதாக | பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் |
| (ஊ) | 2008 இன ஜனவரி 25 ஆம் திகதி 1523/16 ஆம் இலக்க அரச வர்த்தமானில் வெளியிடப்பட்ட 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சொற்றாடல் சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 24 வியாபாரங்கள் சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வர்த்தமானி பத்திரத்தின் மூலம் சபைக்கு கையளக்கப்பட்டுள்ள ஒழுங்குகளை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்குரிய ரூபா 419,062 ஆன சம்பள மீள்நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | குறித்த சம்பளத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நீண்டகாலமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 238,201 ஆன 07 பொது வைப்பு மீதிகள் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கவில்லை. | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் தயாரிக்கப்பட்ட வங்கி இணக்க கூற்றின் பிரகாரம் 21 சந்தர்ப்பங்களில் தரப்பினர்களால் வெவ்வேறு விடயங்களுக்காக சபை நிதியத்திற்கு செலவு வைக்கப் பட்டிருந்த ரூபா 242,999 தொகை 20 ஆண்டுகள் முதல் 36 ஆண்டுகள் வரையான கால வீச்சில் தீர்வு செய்யப்பட்டு இருக்கவில்லை. | ஆராய்ந்து பார்த்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஈ) | சபைக்கு சொந்தமான 03 வாகனங்களின் மைலோ மீட்டர் நீண்ட காலமாக செயலற்று இருந்த போதும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக மீளாய்வாண்டில் பயன்படுத்தப்பட்ட 208.45 லிட்டர் எரிபொருளுக்காக செலவிடப்பட்ட ரூபா 68,872 இன் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | ஆராய்ந்து பார்த்து தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மைலோ மானி தற்போது திருத்தம் செய்யப்பட்டுள்ளதாக | மைலோ மானி திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு 03 வங்கி நடைமுறைக் கணக்குகளில் மீதி ரூபா 13,742,314 ஆக காணப்பட்ட மீண்டெழும் பெறுவனவுகளில் எத்தகைய பணத்தையும் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்தாமல் விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. | இவ்வாண்டில் அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதாக தயவுடன் அறியத் தருவதுடன் முன்னைய ஆண்டின் செலவினக் கட்டுப்பாட்டின் பேரில் அபிவிருத்தி செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை யென | சபை வருமானம் பிரதேச அபிவிருத்திக்கு பயன்படுத்த வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் உள்ளவாறு ரூபா 2,546,375 ஆன 09 நிலையான சொத்துக்கள் மற்றும் இனங்கான முடியாத 15 நிலையான சொத்துக்கள் 4 ஆண்டுகள் முதல் 13 வரையான காலப்பகுதியில் விளைற்று குறைப் பயன்பாட்டுடன் காணப்பட்டது. | பொருத்தமான வகையில் திருத்தம் செய்வதற்கு ' வெளியேற்றுவதற்கு / ஏலவிற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதமாக | சொத்துக்களை பயன்படுத்துவதற்கு அல்லது கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 10 வாகனங்களின் உரித்தைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி உரிய கையேற்றலை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக | கையேற்றலை முறையாக மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 04 கடைகள், மன்திரிதென்ன கழிவுப்பொருள் தொகுதி, பதியபலல்ல உப அலுவலகம் மற்றும் நூலகம் மெகின்னவெலை சனசமூக மண்டபம் என்பன திருத்தம் செய்யப்படாமல் உருக்குலைந்திருந்தது. | மண்சரிவு அபாயம் உள்ள இடமென்றாக இருப்பதால் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளதாக | சபையின் ஆதனங்களை பாதுகாத்தல் வேண்டும் |
| (ஈ) | சபைக்குரிய மூன்று மயானங்கள் மற்றும் காணி ஒன்றின் வேலிகள் இட்டு பாதுகாப்பு உறுதிப்படுத் தப்பட்டு இருக்கவில்லை. | சபை நிதியத்திற்குச் சொந்தமாக போதியளவு பணம் இல்லாமையால் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் உள்ளதாக | சபை ஆதனங்களில் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற குறைப் பயன்பாட்டிலான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ராகல மயான காணி மயான பூமியாக பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் 01 ஏக்கர் அளவிலான காணி விளைவற்று காணப்பட்டது. | உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளருக்கு அறித்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதாக | சபை ஆதனங்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 புலப்படக்கூடிய மோசடிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஒக்தோபர் முதல் 2021 திசெம்பர் வரையான காலப்பகுதியில் | சம்பள முறைகேடு தொடர்பாக அறவிடப்பட்ட தொகை நிலையான | நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்த சம்பள முறைகேடு மற்றும் உரிய தரப்பினரிடமிருந்து அறவிடப்பட்ட ரூபா 3,660,000 தொகை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வைப்பாக வேறாக வங்கியில் இடப்பட்டுள்ளதாக | எடுத்தல் வேண்டும். |

### 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மரணித்த மற்றும் வேலையில் இடை நிறுத்தம் செய்யப்பட்ட 25 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 638,082 ஆன கடன் மீதிகள் 04 மாதங்கள் முதல் 07 ஆண்டு காலப்பகுதியில் இருந்து அறவிடப் பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | தாபன விதிக்கோவையின் நியதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |